[1979 ஏப்ரல் 1]

நெல் கொள்முதல்.

*வினா எண் 682—திரு. கு. ரமணி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த வருடம் 7 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யும் என்று அறிவித்தபடி கொள்முதல் ஆகிவிட்டதா ?

(ஆ) இல்லை எனில் எவ்வளவு கொள்முதல் ஆகி உள்ளது ?

(இ) இதில் தமிழகத்தில், இதர மாநிலங்களில் முறையே எவ்வளவு கொள்முதல் செய்துள்ளது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ), மற்றும் (ஆ) 1977 குறுவை பருவத்திலும் 1978 சம்பா பருவத்திலும் சட்ட பூர்வமான லெவி கொள்முதல் முறைகளில் 1·12 இலட்சம் அரிசி டன்கள் கொள்முதல் ஆகி உள்ளது. தமிழகத்திலும், வெளி மாநிலங்களிலும் வாங்கப்பட்டுள்ள நெல்/அரிசியையும் மத்திய தொகுப்பில் இருந்து பெற்ற 1.66 இலட்சம் டன்களையும் சேர்த்து மொத்தம் வாங்கப்பட்ட அளவு 5.00 இலட்சம் டன்களாகும்.

(இ) தமிழகத்தில் சட்ட பூர்வமான கொள்முதல் விவரம்—

1977 குறுவை பருவம்	..	23,049 டன்கள்.
1978 சம்பா பருவம்	..	88,772 டன்கள்.
மொத்தம்	..	1,11,821 டன்கள்

தமிழகத்தில் 1—2—78 முதல் வெளிச்சந்தையில் வாங்கப் பட்ட அளவு.		1,03,876 டன்கள்.
வெளிமாநிலங்களில் வெளிச் சந்தையில் வாங்கப்பட்டது.		1,18,635 டன்கள்.
மொத்தம்	..	3,34,332 டன்கள்.

திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழகத்தில் நெல் கொள்முதல் போதிய அளவுக்கு நடைபெறாமல் விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை, மத்திய

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 11]

சர்க்கார் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச விலையான ரூ. 85-க்கு கூட வாங்காமல் கஷ்டமாக விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, வெளிமாநிலங்களில் சென்று இவ்வளவு நெல் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் என்ன? இதில் ஏதாவது ஆதாயம் இருக்கிறதா ? தமிழ்நாட்டு நலனை பாதுகாக்கின்ற விதத்தில் இனிமேல் எதிர்காலத்திலாவது இங்கேயே கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கொள்முதல் செய்யாமல் வெளி மாநிலங்களில் கொள்முதல் செய்தது தவறு என்கின்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்தர்ப்பத்தை புரிந்து கொள்ளாமல் இதை எழுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை, அதாவது 1976 ஏப்ரல் மாதம் முதல் 1977 மார்ச் வரை 7·16 லட்சம் டன்களும், 1977 ஏப்ரல் முதல் 1978 ஆகஸ்டு மாதம் வரை 4·88 லட்சம் டன்களும் தமிழகத்தில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் வெளி மாநிலங்களில் கொள்முதல் செய்தது 1977 ஆம் ஆண்டு இறுதியில் மட்டும்தான். காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன், 1977 ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் தொடர்ந்து தொடர்ச்சியாக மழை பெய்த காரணத்தால் தஞ்சை மாவட்டம் தென்னாற்காடு மாவட்டம் போன்ற மாவட்டங்களில் பெரும்பான்மையாக இயற்கையின் கொடுமை காரணமாகவும், தமிழகத்தில் பெருவாரியான அளவுக்கு பயிரிடப்பட்டிருந்தது குறுவையாக இருந்த காரணத்தினாலும், அப்போது பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டதாலும், மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்த காரணத்தினால், நெல்லை போதுமான அளவுக்குக் கொள்முதல் செய்ய முடியாத நிலையிலும், போதிய அளவுக்கு தேக்கி வைக்க முடியாது என்கின்ற நிலைமை இருந்ததாலும், அதன் அடிப்படையில் வெளி மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்வது என்று முடிவு செய்தோம். அந்த அடிப்படையில் வெளிமாநிலத்திலிருந்து கொள்முதல் செய்த காரணத்தினால்தான், இப்போது ஓரளவுக்கு கையிருப்பு தாராளமாக இருக்கிறது. அதன் காரணத்தால் இன்றைக்கு வெளிச் சந்தையில் தாராளமாக வாங்கிக்கொள்ளலாம் என்கின்ற நிலைமை இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள விவசாயிகள் அவர்களுடைய நெல்லை விற்க இயலாத நிலைமையில் இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல விலை கிடைக்கவில்லை. அரசாங்கம் கொள்முதல் செய்வதிலும் சிக்கல் இருக்கிறது. ஆகவே, இந்த நெல், உணவு தானியங்களை வெளிநாடு

களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குகூடுதல் பட்சம் அதிகமாக விலை கிடைக்கின்ற சாத்தியக்கூறுகளை இந்த அரசு படிப்படியாக உருவாக்கி வருவது மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். உதாரணமாக கடந்த குறுவை அறுவடையின்போது தஞ்சை மாவட்டத்திலிருந்து வெளிமாநிலங்களுக்கு நெல், அரிசி எடுத்துச் சென்ற போது இந்த அரசு லெவி விதிப்பதில் முழுமையாக விதிவிலக்கு அளித்தது என்பதையும், தஞ்சை மாவட்டத்தைத் தவிர பிற மாவட்டங்களிலிருந்து வெளி மாநிலங்களுக்குச் செல்லும் நெல், அரிசிக்கு வழக்கமாக வசூலிப்பதைவிட குறைவான அளவுக்கு லெவி விதிக்கப்பட்டது என்பதையும் உறுப்பினர்கள் அறிவார்கள். இந்த மாநிலத்தில் விவசாயிகளுக்கு ஒரு நியாயமான விலை கிடைப்பதற்கு சூழ்நிலை இல்லை, எனவே வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போய் நல்ல விலைக்கு விற்பதற்கு இந்த அரசு நடவடிக்கை, வசதி செய்து கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அந்த அடிப்படையில் தான் இந்த உத்தரவு அண்மையில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசின் அனுமதி பெற்று வெளிநாடுகளுக்கு அரிசி நெல் ஏற்றுமதி செய்வதற்கு உத்தேசம் இருக்கிறதா என்று கேட்டார்கள். இதைப்பற்றி மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதில் சொல்கின்ற நேரத்தில், நிலைமையை சரியாகப் புரிந்து கொண்டார்களோ, என்னவோ என்று குறிப்பிட்டார்கள். நிலைமையை ஓரளவுக்கு நாங்கள் பரிசீலனை செய்து, நன்றாகத் தெரிந்து கொண்டுதான், அவர்களிடத்திலே இந்த விஷயங்களை நான் முன் வைக்கிறேன். இங்கே இருக்கிற விவசாயிகளுக்கு 85 ரூபாய் என்றுகூட நெல்லை விற்க முடியாமல், ரூபாய் 63, ரூபாய் 65-க்கும் விற்க முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அது உண்மைதான். அப்படி இருக்கும்போது, அரசுக்கு கொஞ்சம் பணக் கஷ்டம் இருந்தாலும்கூட. இந்த நெல் முழுமையையும் அரசே கொள்முதல் செய்கின்ற நிலை ஏற்பட்டால், மார்க்கெட்டில் விலை ஓரளவுக்கு ஸ்திரப்பட்டு, இந்த விவசாயிகளுக்கு நன்மை அளிக்கும். அரசிடம் ஸ்டாக் தேங்கி விட்டால் என்ன செய்வது, எவ்வளவு ஸ்டாக் செய்வது என்பது சிந்திக்க வேண்டிய காரியம், அப்படிப்பட்ட காரியம் செய்தால் மட்டும் விலை குறையுமா என்று திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டிருந்தால் மட்டும் பிரச்னை தீருமா என்றால் தீராது. எனவே, இந்த

1979 ஏப்ரல் 11]

முறையில் மொத்த நெல்லையும் கொள்முதல் செய்ய அரசே முன்வருமா அப்படி விவசாயிகளிடம் வாங்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குவிண்டால் நெல்லின் அரசினுடைய கொள்முதல் விலை ரூபாய் 85 என்பது கடந்த அக்டோபர் மாதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 1977-லே நாம் கொள் முதல் செய்த காலத்தில் ஒரு குவிண்டால் ரூபாய் 85 என்று விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. 1977-க்குப் பிறகு 1978-லோ அல்லது 1979-லோ எந்த வெளி மாநிலங்களிலிருந்தும் இந்த அரசு நெல் வாங்கவில்லை. வாங்குவதாகவும் இல்லை. 1977-ஆம் வருஷத்திலே இங்கே புயல், வெள்ளம் ஏற்பட்ட காரணத்தினாலும், அறுவடை எப்படியிருக்குமோ என்ற கார ணத்தினாலும், அப்படியே அறுவடை ஆனாலும், தரமானதாக இருக்குமா என்பதாலும், நம்முடைய மாநில அரசு தேவையான நெல்லைத் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத் தாலும், முன்னெச்சரிக்கையாக இருப்பதற்காக வெளி மாநிலத் திலே இருந்து வாங்கப்பட்டதே தவிர, இந்த மாநிலத்திலே அறுவடை செய்கின்ற நெல்லுக்கு குறைந்த விலை கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அப்படி வாங்கப்படவில்லை என்ப தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தமிழகத்தில் ஒரு குவிண்டால் நெல் 85 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படு கிறது. 1977 ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப் பட்ட நெல்லோ அரிசியோ ஒரு குவிண்டால் என்ன விலைக்கு வாங்கப்பட்டது ? இதே விலைக்கு வாங்கப்பட்டதா அல்லது இதைக்காட்டிலும் அதிகமான விலை கொடுத்து வாங்கப்பட்டதா? இப்படி வாங்கி ஸ்டாக்கில் வைத்து அரிசிக்கு சேதாரம் ஏற்பட் டால் அல்லது கெட்டுவிட்டால் அப்படி ஆகாமல் இருக்க என்ன பாதுகாப்பு ? அந்த அடிப்படையில் கடந்த இரண்டாண்டுகளில் அரிசி, நெல் தானியங்கள் எந்த அளவுக்குக் கெட்டு நாசமாகி யிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத துணைக் கேள்வியைக் கேட்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ள கடமை பட்டிருக்கிறேன். கேட்கப்பட்ட மூலக் கேள்வி கொள்முதலைப் பற்றியது. 1977 ஆம் ஆண்டில் என்ன விலைக்கு கொள் முதல் செய்யப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். எனது நினைவு சரியாக இருக்குமானால்—திருத்த வேண்டிய நிலைமை வந்தாலும் வரலாம்—குவிண்டால் 74 ரூபாய் கொடுத்து வாங்கப்பட்டது. குவிண்டாலுக்கு 85 ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற முடிவைக் கடந்த குறுவை அறுவடை

யின்போதுதான் மத்திய அரசு நிர்ணயித்தார்கள். 1978-ஆம் ஆண்டு குறுவையில் இருந்து 85 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அரசு ஸ்டாக் வைத்திருக்கும் நெல் அரிசி நாசமாகிப் போகிறதா என்று கேட்டார்கள். தேவையான அளவுக்கு அரிசியை சேமித்து வைக்கவேண்டியது அரசின் கடமை. கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் நியாய விலைக் கடைகளில் அரிசி விற்பனையாவதில்லை. வெளிச் சந்தையில் அரிசி விலை குறைவாக இருப்பதுதான் அதற்குக் காரணம். அரிசி கிடைக்காத நிலைமை ஒருசில நேரங்களில் ஏற்பட்டால் அதைச் சமாளிக்க அரசு கையிருப்பு வைத்திருக்க வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரிசி கெட்டுப் போவதை ஒன்றும் செய்ய முடியாது. எவ்வளவு அரிசி கெட்டுப் போய்விட்டது என்பதற்கான புள்ளி விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போடுவீர்களானால் அதற்கான தகவல்களைத் திரட்டித் தருகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : இப்படிக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிற நெல்லை எல்லாம் தனியாகக் கொடவுன்களில் வைப்பதன் மூலம் கொடவுன்களுக்கு அதிகமாக வாடகை தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதைப் பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மீண்டும் மெத்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புவது— மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. மூலக் கேள்வி கொள்முதலைப் பற்றியது. உறுப்பினர் அவர்கள் கேட்பது தேக்கி வைத்திருக்கும் கிடங்குகளுக்கு கொடுக்கப்படுகின்ற வாடகைபற்றியது. தனியாகக் கேள்வி போடுவார்களானால் அதற்கான விவரங்களைத் தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அரிசி, உணவு தானியங்களுக்கு ப்ளோர் பிரைஸ் பிக்ஸ் பண்ணுவதாகச் சொல்லுகிறார்கள். ப்ளோர் பிரைசுக்குக் கீழ் விலை போகும்போது நமக்குச் சக்தி இருக்கிறதா, வைக்க இடம் இருக்கிறதா என்று பார்க்க முடியாது. விவசாயிகளுக்கு நஷ்டம் இல்லாமல் அரசு நிர்ணயித்த ப்ளோர் பிரைசுக்கு அத்தனை தானியத்தையும் கொள்முதல் செய்து விவசாயிகளைப் காப்பாற்றினீர்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : கொள்முதல் விலையை மத்திய அரசு நிர்ணயிக்கிறது என்றால் பொதுவாக மாநில அரசு விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு வெளிச் சந்தையில் கொள்முதல் விலையை விட குறைந்த விலை கிடைக்கிறது என்ற நிலைமை இருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வரும்போது நியாயமான கொள்முதல் விலை அடிப்படையில் அரசே வாங்குகிற அப்பேர்ப்பட்ட எண்ணத்துடன் தஞ்சை மாவட்டம் போன்ற பகுதிகளில் அரசு கொள்முதல் செய்ய ஆரம்பித்திருக்கிறது.